# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண். 100, அண்ணா சாலை, கிண்டி, சென்னை- 600 032.

தொலைபேசி : 044– 22201337

மின்னஞ்சல் முகவரி : ombudsmanlocal@tn.gov.in


**முன்னிலை** : **திரு. மகேசன் காசிராஜன், இ.ஆ.ப., (ஓ)**

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

******

**ஆணை எண்: 381 /பேரூ/2025**

**நாள் : 27 .04.2026**

| | | |
|---|---|---|
| 1. | R. சந்தியா | (துணைத் தலைவர் மற்றும் 18வது வார்டு உறுப்பினர், தம்மம்பட்டி பேரூராட்சி) |
| 2 | G. ரமேஷ் | (1வது வார்டு பேரூராட்சி மன்ற உறுப்பினர்) |
| 3 | A. நடராஜ் | (3வது வார்டு பேரூராட்சி மன்ற உறுப்பினர்) |
| 4 | R. வரதராஜன் | 5வது வார்டு பேரூராட்சி மன்ற உறுப்பினர்) |
| 5 | K. சமீனா | (8வது வார்டு பேரூராட்சி மன்ற உறுப்பினர்) |
| 6 | A. சந்திரா | (9வது வார்டு பேரூராட்சி மன்ற உறுப்பினர்) |
| 7 | பெ. செல்வி | (10வது வார்டு பேரூராட்சி மன்ற உறுப்பினர்) |
| 8 | S. புவனேஸ்வரி | (11வது வார்டு பேரூராட்சி மன்ற உறுப்பினர்) |
| 9 | S. காவியா | (12வது வார்டு பேரூராட்சி மன்ற உறுப்பினர்) |
| 10 | B. கலிய வரதராஜ் | (13வது வார்டு பேரூராட்சி மன்ற உறுப்பினர்) |
| 11 | S. நித்யா | (14வது வார்டு பேரூராட்சி மன்ற உறுப்பினர்) |
| 12 | R. ரேவதி | (15வது வார்டு பேரூராட்சி மன்ற உறுப்பினர்) |
| 13 | S. திருச்செல்வன்,தம்மம்பட்டி, சேலம் மாவட்டம். | (17வது வார்டு பேரூராட்சி மன்ற உறுப்பினர்) |

முறையீட்டு மனுதாரர்கள்

1. செயல் அலுவலர்,
   தம்மம்பட்டி சிறப்புநிலை பேரூராட்சி,
   சேலம் மாவட்டம்.
2. ரா. கவிதா,
   தலைவர்,
   தம்மம்பட்டி சிறப்புநிலை பேரூராட்சி,
   சேலம் மாவட்டம்.

எதிர்மனுதாரர்கள்

சேலம் மாவட்டம், தம்மம்பட்டி சிறப்புநிலை பேரூராட்சி மன்ற துணைத் தலைவரும் மற்றும் 18வது வார்டு உறுப்பினருமான (1) திருமதி. R. சந்தியா மற்றும் (2) G. ரமேஷ் (1வது வார்டு பேரூராட்சி மன்ற உறுப்பினர்), (3) A. நடராஜ் (3வது வார்டு பேரூராட்சி மன்ற உறுப்பினர்), (4) R. வரதராஜன் (5வது வார்டு பேரூராட்சி மன்ற உறுப்பினர்), (5) K. சமீனா, (8வது வார்டு பேரூராட்சி மன்ற உறுப்பினர்), (6) A. சந்திரா (9வது வார்டு பேரூராட்சி மன்ற உறுப்பினர்), (7) பெ. செல்வி (10வது வார்டு பேரூராட்சி மன்ற உறுப்பினர்), (8) S. புவனேஸ்வரி (11வது வார்டு பேரூராட்சி மன்ற உறுப்பினர்), (9) S. காவியா (12வது வார்டு பேரூராட்சி மன்ற உறுப்பினர்), (10) B. கலிய வரதராஜ் (13வது வார்டு பேரூராட்சி மன்ற உறுப்பினர்), (11) S. நித்யா (14வது வார்டு பேரூராட்சி மன்ற உறுப்பினர்), (12) R. ரேவதி, (15வது வார்டு பேரூராட்சி மன்ற உறுப்பினர்), (13) S. திருச்செல்வன் (17வது வார்டு பேரூராட்சி மன்ற உறுப்பினர்) ஆகிய 13 தம்மம்பட்டி சிறப்புநிலை பேரூராட்சி மன்ற உறுப்பினர்கள் தங்களது 10.10.2025 நாளிட்ட முறையீட்டு மனுக்கள் இம்முறைமன்ற நடுவத்தில் 14.10.2025 அன்று பெறப்பட்டு, 381/பேரூ/2025 என எண்ணிடப்பட்ட முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டது. முறையீட்டு மனுதாரர்களின் மனுக்கள் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டு கீழ்க்கண்டவாறு ஆணை வெளியிடப்படுகிறது.

## ஆணை

சேலம் மாவட்டம், தம்மம்பட்டி சிறப்புநிலை பேரூராட்சி மன்ற துணைத்தலைவர் திருமதி R. சந்தியா மற்றும் முறையீட்டு மனுதாரர்களாக குறிப்பிடப்பட்டுள்ள 12 தம்மம்பட்டி சிறப்புநிலை பேரூராட்சி வார்டு உறுப்பினர்கள் தங்களது 10.10.2025 நாளிட்ட புகார் மனுக்களில் கீழ்க்காணும் ஒரே மாதிரியான புகார்களை தெரிவித்துள்ளனர்.

“தற்சமயம் தம்மம்பட்டி சிறப்புநிலை பேரூராட்சியில் தலைவராக திருமதி. கவிதா, 4வது வார்டு கவுன்சிலராக தலைவரின் கணவர் ராஜா என்பவர் உள்ளார். மேற்படி பேரூராட்சி மன்ற கூட்டத்தை முறையாக கூட்டுவது இல்லை. மேலும் தலைவருக்கு பதில் அவரது கணவர் ராஜா என்பவர் மன்ற கூட்டத்தில் அனைத்து உறுப்பினர்களையும் மிரட்டும் தொனியில் பேசியும், பெண்களை தரக்குறைவாகவும், சக கவுன்சிலர்களை பல கொச்சை வார்த்தைகளை கொண்டு பேசியும் என்னுடைய பகுதி வார்டுகளுக்கு திட்டப்பணிகள், பொது நிதிபணிகள் ஒதுக்காமல் தனது வார்டு, தனது மனைவி வார்டு (தலைவர்) மற்றும் ஒரு இரண்டு ஆதரவாளர்களின் வார்டுகளில் மட்டும் பணிகளை ஒதுக்கியும் அந்த டெண்டர் பணிகளை தலைவியின் கணவர் அவரே பினாமி பெயரில் டெண்டர் எடுத்துக்கொண்டு 2021 முதல் 2025 வரை எந்த வேலையும் முழுமையாக செய்யாமலும், நேர்த்தியில்லாமலும் செய்து வருகிறார்.

இந்நிலையில் 2022ஆம் ஆண்டு மன்றம் அமைத்ததிலிருந்து சுமார் 9 EOக்கள் பொறுப்பு பார்த்தும், ரெகுலராக பணியாற்றியும் தலைவி மற்றும் அவரது கணவரின் தொல்லை தாங்காமலும் அதிகார துஷ்பிரயோகம் காரணமாக நிரந்தரமாக பணி செய்யவிடாமல் தடுப்பதால் பணிமாறுதல் வாங்கி சென்றுள்ளனர். தற்சமயம் அருகாமையில் உள்ள EO IC பார்க்கிறார். ஊரில் எந்த பணிகளும் நடைபெறவில்லை. மேலும் தூய்மை பணியாளர்களிடம் சுமார் 15 நபர்களிடம் பெருமளவு பணம் பெற்றுக்கொண்டு அலுவலகத்தில் பணி நிரந்தரம் செய்து தருகிறேன் என்று கூறி அவர்களை குழுவில் நியமித்து மேற்படி நபர்கள் எந்தவித பணியும் செய்ய வருவதில்லை. வருகை பதிவேட்டில் மட்டும் கையொப்பமிட்டு ஜாலியாக தலைவியின் கணவர் ராஜாவோடு மந்திரியை பார்க்க, மாவட்ட செயலாளரை பார்க்க, தனது வீட்டு வேலைக்கும் கட்சி நிகழ்ச்சிகளில் கலந்துகொள்ள அழைத்து கொண்டும், மேலும் துப்புரவு பணியாளர்கள், பெண்கள், கொசு மருந்து தெளிக்கும் பெண்கள் அனைவரையும் கூட்ட நிகழ்ச்சிக்கு அழைத்துச் சென்று இவர்கள்தான்

கவுன்சிலர்கள் என கூறிக்கொண்டு ஊரில் எவ்வித சுகாதார பணிகளும் நடைபெறுவதில்லை. பணிகள் நடைபெற தடையாக இருந்து கொண்டு ஆதிக்கம் செலுத்தி வருகிறார்கள்.

மேலும் கடந்த 01.04.2025ஆம் தேதி மன்ற கூட்டத்தில் எங்களது பகுதிக்கும் வேலைகள் செய்து தர கேட்ட கவுன்சிலர்களின் 4 பேர் மீது தலைவி 160(8) பிரிவு சட்டத்தில் இல்லாத புதிய உத்தரவான இரண்டு கூட்டத்தில் கலந்துகொள்ள கூடாது என சுயநல நோக்கத்தோடு எங்களை சஸ்பெண்ட் செய்தார். நாங்கள் சென்னை உயர்நீதிமன்றம் சென்று அந்த போலி உத்தரவை ரத்து செய்து ஆர்டர் பெற்றுள்ளோம். இந்நிலையில் எதற்கெடுத்தாலும் கொள்ளையடிப்பதிலேயும், சகமன்ற உறுப்பினர்களையும், பெண் உறுப்பினர்களையும், அதிகாரிகளையும் ஒருமையில் பேசியும், இரட்டை அர்த்த வார்த்தைகளை பெண்களிடம் பேசியும் மன்ற சக உறுப்பினர்களை அவமானப்படுத்தி வரும் தலைவியின் கணவரை பற்றி பலமுறை AD, EO, மாவட்ட ஆட்சியர் என அனைத்து தரப்பினருக்கும் தெரிவித்தும் எவ்வித நடவடிக்கையும் இல்லை. பேரூராட்சி கடைகளின் வாடகை வசூலிக்கவும், பேரூராட்சி கடை ஏலம் விடுவதையும் தடை ஏற்படுத்தி பேரூராட்சிக்கு வருவாய் இழப்பு ஏற்படுத்தி வருகிறார்கள்.

ஆகவே கடந்த 16.07.2025-ல் EO ஜெசிமாபானு அவர்களிடம் 11 பேர் கொண்ட மனு கையொப்பமிட்டு தலைவர் மீது நம்பிக்கையில்லாத தீர்மானம் கொண்டு வர வேண்டுமென மனு வழங்கினோம். பின்னிட்டு 18.07.2025-ல் மாவட்ட ஆட்சியர், பேரூராட்சிகளின் இயக்குநர் DR, பேரூராட்சிகளின் உதவி இயக்குநர் AD மற்றும் பேரூராட்சி செயல் அலுவலரும் ROவுமான அனைவருக்கும் பதிவு தபால் அனுப்பி உள்ளோம். இதுவரை எவ்வித நடவடிக்கையும் எடுக்கவில்லை. பிறகு முறைமன்ற நடுவர் அய்யா அவர்களுக்கு மனு 22.09.2025-ல் பதிவு தபால் மூலம் 13 கவுன்சிலர்கள் கையொப்பமிட்டு அனுப்பினோம். அனைத்தும் உண்மை என்றும் எதுவும் மிகைப்படுத்தியோ பிறரை தாழ்வு செய்யும் நோக்கத்திலோ, காழ்ப்புணர்ச்சியிலோ எவ்வித சங்கதிகளும் கூறவில்லை எனவும் மற்றும் அய்யா அவர்கள் மேற்படி அராஜக நபரான தலைவி ரா. கவிதா அவர்கள் மீது நம்பிக்கையில்லா தீர்மானம் கொண்டுவர தேவையான உத்தரவுகளை வழங்கி பேரூராட்சி மன்ற மரபுகளை காத்து உதவிடுமாறு அய்யா அவர்களை பணிவுடன் வேண்டி கேட்டுக்கொள்கிறேன்".

2. முறையீட்டு மனுதாரர்களின் புகார் மனுக்கள் மீதான அறிக்கையை அனுப்புமாறு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தின் 19.11.2025 நாளிட்ட அறிவிப்பின் மூலம் தம்மம்பட்டி சிறப்புநிலை பேரூராட்சி செயல் அலுவலரிடம் கோரப்பட்டது.

3. தம்மம்பட்டி சிறப்புநிலை பேரூராட்சி செயல் அலுவலர் தனது 02.01.2026 நாளிட்ட அறிக்கை ந.க. எண். 1158/2025/அ1-ல் மனுதாரர்களின் குற்றச்சாட்டுகளுக்கு முறையே கீழ்க்கண்டவாறு விளக்கம் அளித்துள்ளார்:

"தம்மம்பட்டி சிறப்புநிலை பேரூராட்சியில் 17.10.2025ம் தேதி முதல் செயல் அலுவலராக பணியாற்றி வருகிறேன். எனது பணிக்காலத்தில் மன்ற தலைவர் அவர்களால் 06.11.2025, 13.11.2025 மற்றும் 05.12.2025 ஆகிய தேதிகளில் மன்ற கூட்டம் நடத்த அஜெண்டா நிகழ்ச்சிநிரல் அனைத்து மன்ற உறுப்பினர்களுக்கு பதிவஞ்சல் மூலம் அனுப்பிவைக்கப்பட்டது. மேற்படி மன்ற கூட்டம் நடத்தப்பட்டதில் தலைவர் உட்பட 5 மன்ற உறுப்பினர்கள் மட்டுமே கலந்துக்கொண்டார்கள். மேற்குறிப்பிட்டுள்ள மனுதாரர்கள் யாரும் கலந்துகொள்ளவில்லை. எனவே கோரம் இல்லாததால் மன்ற கூட்டங்கள் ஒத்தி வைக்கப்பட்டது. மேலும் மன்ற கூட்டம் ஒத்தி வைக்கப்பட்டதால் பொதுமக்களின் அத்தியாவசிய பணிகள் குறித்து ஏதும் விவாதிக்கப்படவில்லை. இருந்த போதிலும் செயல் அலுவலர் அதிகாரத்திற்கு உட்பட்டு மேற்கொள்ளப்பட்டு பணிகள் நல்லமுறையில் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

மேலும் மேற்படி கூட்டத்தில் தலைவரின் கணவர் திரு. வி.பி.ஆர். ராஜா யாரையும் மிரட்டும் தொனியிலும், பெண்களை தரக்குறைவாகவும் கொச்சை வார்த்தைகளை பயன்படுத்தியோ பேசியது இல்லை என்ற விவரம் தெரிவித்துக்கொள்கிறேன்.

இப்பேரூராட்சியில் அனைத்து பணிகளும் அனைத்து வார்டுகளுக்கும் தேவையான வேலையினை கண்டறிந்து எது பொதுமக்களுக்கு முக்கியம் / அவசியம் என கருதி, உரிய முறை இணையதளம் வாயிலாக ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு செய்து குறைந்த ஒப்பந்தப்புள்ளி வழங்கிய ஒப்பந்ததாரருக்கு பணிக்கான ஆணை வழங்கப்பட்டுள்ளது. மேலும் ஒப்பந்ததாரர்கள் இப்பேரூராட்சியில் உரிய முறையில் பதிவு பெற்ற பின்னரே பணி ஆணை வழங்கப்படும். மேலும் தலைவரின் கணவர், அவரே பினாமி பெயரில் டெண்டர் எடுத்துள்ளார் என தெரிவித்துள்ள தகவல் முற்றிலும் உண்மைக்கு புறம்பான தகவலாகும்.

இப்பேரூராட்சியில் செயல் அலுவலரை பணிமாற்றுதல் செய்ய பேரூராட்சிகளின் இயக்குநர் அவர்களுக்கு மட்டுமே முழு அதிகாரம் உள்ளது. தலைவரின் தூண்டுதலில் பணிமாறுதல் செய்யப்பட்டுள்ளது என்பது தவறான தகவலாகும். மேலும் பணியாளர்களிடம் பணம் பெற்றுள்ளதாக தகவல் குறித்து பணியாளர்களை விசாரணை செய்ததில் அவ்வாறு எவ்வித நிகழ்வு நடைப்பெறவில்லை என தெரிவித்துள்ளார்கள்.

மேலும் தம்மம்பட்டி பேரூராட்சியில் நம்பிக்கையில்லா தீர்மானம் குறித்து மன்ற உறுப்பினர்கள் 21.07.2025ம் தேதி அளித்துள்ள மனுவில் 11 உறுப்பினர்களும், 15.10.2025ம் தேதி அளித்துள்ள மனுவில் 13 உறுப்பினர்களும் கையெழுத்திட்டு மனு அளிக்கப்பட்டுள்ளது. அதன் முரண்பாடுகள் நிவர்த்தி செய்யப்பட வேண்டும் எனவும் தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் சட்டம் 1998 (திருத்தம்) பிரிவு 51 உட்பிரிவு 2ன் விதிமுறைகளின்படி அரசால் நிர்ணயிக்கப்பட்ட படிவத்தில் மனு அளிக்கப்படவில்லை. எனவே நம்பிக்கையில்லா தீர்மானத்திற்கான நோக்கம் தெளிவாக குறிப்பிடப்பட்டு மேற்படி படிவத்தில் அளிக்கப்பட வேண்டுமெனவும் தெரிவித்து 26.11.2025ம் தேதியிட்ட கடிதம் மன்ற உறுப்பினர்களுக்கு அனுப்பப்பட்டுள்ளது என்ற விவரத்தினை இதன்மூலம் பணிவுடன் தெரிவித்துக்கொள்கிறேன்''.

4. மனுதாரர்களான பேரூராட்சி மன்ற துணைத் தலைவர் மற்றும் 12 பேரூராட்சி மன்ற வார்டு உறுப்பினர்கள் மற்றும் எதிர்மனுதாரரான பேரூராட்சி செயல் அலுவலர், இரண்டாம் எதிர்மனுதாரரும் மற்றும் புகாருக்குள்ளவருமான பேரூராட்சி மன்றத்தலைவர் திருமதி. ர. கவிதா, ஆகியோரை 10.02.2026 அன்று விசாரணைக்கு ஆஜராகுமாறு 30.01.2026 தேதியிட்ட அழைப்பாணைகள் அனுப்பப்பட்டன.

5. மனுதாரர்களான திருமதி. R. சந்தியா, பேரூராட்சி மன்ற துணைத்தலைவர் மற்றும் 12 வார்டு உறுப்பினர்கள் ஆக 13 பேரூராட்சி மன்ற வார்டு மன்ற உறுப்பினர்களும் தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தில் 10.02.2026 அன்று நடைபெற்ற விசாரணையில் ஆஜராகவில்லை.

6. இதற்கிடையில் எதிர்மனுதாரரான தம்மம்பட்டி சிறப்புநிலை பேரூராட்சி செயல் அலுவலர் தனது 09.02.2026 நாளிட்ட அறிக்கை ந.க. எண். 1158/2025/அ1-ல் மனுதாரர்களின் குற்றச்சாட்டுகளுக்கு முறையே கீழ்க்கண்டவாறு கூடுதல் விளக்கம் அளித்துள்ளார்.

"தம்மம்பட்டி சிறப்புநிலை பேரூராட்சியில் 13.08.2025, 06.11.2025, 13.11.2025 மற்றும் 05.12.2025 ஆகிய தேதிகளில் மன்ற கூட்டம் நடத்த அஜெண்டா நிகழ்ச்சிநிரல் அனைத்து மன்ற உறுப்பினர்களுக்கு பதிவஞ்சல் மூலம் அனுப்பிவைக்கப்பட்டது. மேற்படி மன்ற கூட்டம் நடத்தப்பட்டதில் தலைவர் உட்பட 5 மன்ற உறுப்பினர்கள் மட்டுமே கலந்துக்கொண்டார்கள்.

மேற்குறிப்பிட்டுள்ள மனுதாரர்கள் யாரும் கலந்துகொள்ளவில்லை. எனவே கோரம் இல்லாததால் மன்ற கூட்டங்கள் ஒத்தி வைக்கப்பட்டது. மேலும் மன்ற கூட்டம் ஒத்தி வைக்கப்பட்டதால் பொதுமக்களின் அத்தியாவசிய பணிகள் குறித்து ஏதும் விவாதிக்கப்படவில்லை. இருந்த போதிலும் செயல் அலுவலர் அதிகாரத்திற்கு உட்பட்டு மேற்கொள்ளப்படும் பணிகள் நல்லமுறையில் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

மேலும் இப்பேரூராட்சியில் 23.01.2026ஆம் தேதி முதல் கூடுதல் பொறுப்பு செயல் அலுவலராக பணியாற்றி வருகிறேன். என் பணிகாலத்தில் மன்ற கூட்டம் நடைபெறாததால் மனுவில் தெரிவித்த நிகழ்வுகள் குறித்து கூட்டத்தில் தலைவரின் கணவர் திரு. வி.பி.ஆர். ராஜா யாரையும் மிரட்டும் தொனியிலும், பெண்களை தரக்குறைவாகவும் கொச்சை வார்த்தைகளை பயன்படுத்தியோ பேசியது என்ற விவரம் எனக்கு தெரியவில்லை என்பதை தெரிவித்துக்கொள்கிறேன்.

இப்பேரூராட்சியில் அனைத்து பணிகளும் அனைத்து வார்டுகளுக்கும் தேவையான வேலையினை கண்டறிந்து எது பொதுமக்களுக்கு முக்கியம் / அவசியம் என கருதி, உரிய முறை இணையதளம் வாயிலாக ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு செய்து குறைந்த ஒப்பந்தப்புள்ளி வழங்கிய ஒப்பந்ததாரருக்கு பணிக்கான ஆணை வழங்கப்பட்டுள்ளது. மேலும் ஒப்பந்ததாரர்கள் இப்பேரூராட்சியில் உரிய முறையில் பதிவு பெற்ற பின்னரே பணி ஆணை வழங்கப்படும். மேலும் தலைவரின் கணவர், அவரே பினாமி பெயரில் டெண்டர் எடுத்துள்ளார் என தெரிவித்துள்ள தகவல் முற்றிலும் உண்மைக்கு புறம்பான தகவலாகும்.

இப்பேரூராட்சியில் செயல் அலுவலரை பணிமாற்றுதல் செய்ய பேரூராட்சிகளின் இயக்குநர் அவர்களுக்கு மட்டுமே முழு அதிகாரம் உள்ளது. தலைவரின் தூண்டுதலில் பணிமாறுதல் செய்யப்பட்டுள்ளது என்ற தகவல் என்னால் உறுதி செய்யப்பட இயலாத தகவல் என்றும் பணியாளர்களிடம் பணம் பெற்றுள்ளதாக தெரிவித்ததும் என்னால் உறுதி செய்யப்படாத தகவல் என்பதை தெரிவித்துக்கொள்கிறேன்.

மேலும் தம்மம்பட்டி பேரூராட்சியில் நம்பிக்கையில்லா தீர்மானம் குறித்து மன்ற உறுப்பினர்கள் 21.07.2025ம் தேதி அளித்துள்ள மனுவில் 11 உறுப்பினர்களும், 15.10.2025ம் தேதி அளித்துள்ள மனுவில் 13 உறுப்பினர்களும் கையெழுத்திட்டு மனு அளிக்கப்பட்டுள்ளது. அதன் முரண்பாடுகள் நிவர்த்தி செய்யப்பட வேண்டும் எனவும் தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் சட்டம் 1998 (திருத்தம்) பிரிவு 51 உட்பிரிவு 2ன் விதிமுறைகளின்படி அரசால் நிர்ணயிக்கப்பட்ட படிவத்தில் மனு அளிக்கப்படவில்லை. எனவே நம்பிக்கையில்லா தீர்மானத்திற்கான நோக்கம் தெளிவாக குறிப்பிடப்பட்டு மேற்படி படிவத்தில் அளிக்கப்பட வேண்டுமெனவும் தெரிவித்து 25.11.2025ம் மற்றும் 24.12.2025 தேதிகளில் மன்ற உறுப்பினர்களுக்கு கடிதம் அனுப்பப்பட்டுள்ளது என்ற விவரத்தினை இதன்மூலம் பணிவுடன் தெரிவித்துக்கொள்கிறேன்" என தெரிவித்துள்ளார்.

7. எதிர்மனுதாரரான தம்மம்பட்டி சிறப்புநிலை பேரூராட்சி செயல் அலுவலர் தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தில் 10.02.2026 அன்று நடைபெற்ற விசாரணையில் ஆஜராகி தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் முன்னிலையில் கீழ்க்கண்டவாறு தனது வாக்கு மூலத்தை அளித்துள்ளார். அதில் –

(1) நான் தம்மம்பட்டி பேரூராட்சி செயல் அலுவலராக (பொறுப்பு) 23.01.2025 முதல் பணியாற்றி வருகிறேன். 13.08.2025, 06.11.2025, 13.11.2025 மற்றும் 05.12.2025 ஆகிய தேதிகளில் மன்றத் தலைவரால் மன்றக் கூட்டங்கள் நடத்த அஜெண்டா

மன்ற உறுப்பினர்களுக்கு அனுப்பப்பட்டதில் தலைவர் உட்பட 5 மன்ற உறுப்பினர்கள் மட்டுமே கலந்துகொண்டதால் போதிய கோரம் இல்லாததால் கூட்டங்கள் நடத்தபட முடியாமல் ஒத்தி வைக்கப்பட்டது. இருப்பினும் செயல் அலுவலரின் அதிகாரத்துக்குட்பட்ட பணிகள் நன்முறையில் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

(2) மன்றத் தலைவரின் கணவர் திரு. வி.பி.ஆர். ராஜா என்பவர் எவரையும் மிரட்டும் தொனியிலும், பெண்களை தரக்குறைவாக நடத்தி கொச்சை வார்த்தைகளில் பேசியது குறித்து அக்காலக் கட்டத்தில் நான் பேரூராட்சியில் பணியில் இல்லாததால் எனக்கு இப்புகார் குறித்து விபரம் தெரியவில்லை என்பதை தெரிவித்துக்கொள்கிறேன்.

(3) பேரூராட்சியின் பணிகளை மேற்கொள்ள இணையதளம் மூலம் ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு செய்து குறைந்த ஒப்பந்தப்புள்ளி வழங்கும் ஒப்பந்ததாரருக்கு விதிமுறைகளின்படி பணி ஆணை வழங்கப்படுகிறது. இந்நிலையில் மன்றத் தலைவரின் கணவரே பினாமி பெயரில் டெண்டர் எடுத்துள்ளார் என்பது முற்றிலும் உண்மைக்கு புறம்பானது.

(4) பேரூராட்சி மன்ற அனைத்து வார்டுகளுக்கும் தேவைகளின் அடிப்படையில் திட்டப் பணிகள் எவ்வித பாரபட்சமின்றி பணிகள் ஒதுக்கப்படுகிறது.

(5) பேரூராட்சி செயல் அலுவலர்களை பணி மாறுதல் செய்யும் முழு அதிகாரம் சென்னை பேரூராட்சிகளின் இயக்குநருக்கு மட்டுமே உள்ள நிலையில், பேரூராட்சி மன்ற தலைவரின் தூண்டுதலின் காரணமாக பணி மாறுதல் செய்யப்பட்டுள்ளனர் என்பது தவறான தகவலாகும்.

(6) மன்றத் தலைவர் மீது நம்பிக்கையில்லா தீர்மானம் குறித்து 11 உறுப்பினர்கள் அளித்த 21.07.2025 நாளிட்ட மனுவிலும் மற்றும் 15.10.2025 அன்று 13 உறுப்பினர்கள் அளித்த மனுவிலும் சில முரண்பாடுகளுடன் அரசால் நிர்ணயிக்கப்பட்ட படிவத்தில் மனு அளிக்கப்படவில்லை. இந்நிலையில் நம்பிக்கையில்லா தீர்மானத்தின் நோக்கத்தை தெளிவாக குறிப்பிட்டு உரிய படிவத்தில் அளிக்கப்பட வேண்டுமென 26.11.2025 அன்று மன்ற உறுப்பினர்களுக்கு கடிதம் அளிக்கப்பட்டுள்ளது என்பதை இம்முறைமன்ற நடுவத்தில் பணிவுடன் தெரிவித்துக்கொள்கிறேன் என தெரிவித்துள்ளார்.

8. இரண்டாம் எதிர்மனுதாரரும் புகாருக்குள்ளானவருமான பேரூராட்சி மன்றத் தலைவர் திருமதி. ரா. கவிதா மற்றும் அவரது கணவரும் பேரூராட்சி மன்ற 4வது வார்டு உறுப்பினருமான திரு. வி.பி.ஆர். ராஜா ஆகியோர் தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தில் 10.02.2026 அன்று நடைபெற்ற விசாரணையில் ஆஜராகி தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் முன்னிலையில் ஒன்றாக கீழ்க்கண்டவாறு தங்களது வாக்கு மூலத்தை அளித்துள்ளனர். அதில் –

(1) தம்மம்பட்டி சிறப்புநிலை பேரூராட்சி மன்றத்தில் 06.11.2025, 13.11.2025 மற்றும் 05.12.2025 ஆகிய தேதிகளில் மன்றத் தலைவராகிய என்னால் மன்றக் கூட்டங்கள் நடத்த அஜெண்டா மன்ற உறுப்பினர்களுக்கு அனுப்பப்பட்டது. தலைவர் உட்பட 5 மன்ற உறுப்பினர்கள் மட்டுமே கலந்துகொண்டதால் சட்டப்படி தேவையான போதிய கோரம் இல்லாததால் கூட்டங்கள் நடத்தபட

முடியாமல் ஒத்தி வைக்கப்பட்டது. எனவே இது சட்ட மீறல் அல்ல, சட்டத்தில் அனுமதிக்கப்பட்ட முறையாகும். இதற்கு ஆதாரமாக மன்றகூட்ட தீர்மான பதிவேடு உள்ளது.

(2) எனது கணவர் திரு. ராஜா என்பவர் பேரூராட்சி மன்ற 4வது வார்டு உறுப்பினராக உள்ளார். அவர் எந்த நேரத்திலும் பேரூராட்சிமன்ற மகளிர் உறுப்பினர்களிடம் தரக்குறைவாகவோ, அவதூறாகவோ, மரியாதைக் குறைவாகவோ பேசியதில்லை. இத்தகைய குற்றச்சாட்டுகள் ஆதாரமற்றவை, காழ்ப்புணர்ச்சியின் காரணமாக புகார் தெரிவித்துள்ளனர்.

(3) அரசு விதிகளின்படி பேரூராட்சியின் பணிகளை மேற்கொள்ள இணையதளம் மூலம் ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு செய்து குறைந்த ஒப்பந்தப்புள்ளி வழங்கும் ஒப்பந்ததாரருக்கு விதிமுறைகளின்படி பணி ஆணை வழங்கப்பட்டு வரும் நிலையில், தேவையின்றி எனது கணவரால் பினாமி பெயரில் டெண்டர் எடுத்துள்ளார் என்பது முற்றிலும் உண்மைக்கு புறம்பானது என தெரிவித்துக்கொள்கிறேன். டெண்டர் செயல்முறைகள் அனைத்தும் வெளிப்படையாக மேற்கொள்ளப்பட்டன.

(4) பொதுமக்களின் நலன் கருதியும் பேரூராட்சி மன்ற உறுப்பினர்களால் அளிக்கப்படும் திட்டப் பணிகள் அனைத்தும் அவரவரது வார்டுகளுக்கு தேவையான பணிகளை எவ்வித பாரபட்சமின்றி பணிகள் ஒதுக்கப்படுகிறது.

(5) தூய்மைப் பணியாளர்களின் பணியினை நிரந்தரம் செய்வது என்பது அரசின் கொள்கை முடிவாகும். பேரூராட்சி மன்ற தலைவர் அல்லது மன்ற உறுப்பினர்களுக்கு தனிப்பட்ட முறையில் பணி நிரந்தரம் செய்ய எவ்வித அதிகாரமும் இல்லை. தூய்மைப் பணியாளர்களிடம் பணம் பெற்றதாக குற்றச்சாட்டு ஆதாரமற்றவை. மேலும் இது குறித்து பணியாளர்களிடம் செயல் அலுவலரால் விசாரணை மேற்கொள்ளப்பட்டதில் அவ்வாறு எந்த தவறும் நடைபெறவில்லை என செயல் அலுவலரால் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(6) பேரூராட்சி செயல் அலுவலர்களை பணி மாறுதல் செய்யும் முழு அதிகாரம் சென்னை பேரூராட்சிகளின் இயக்குநருக்கு மட்டுமே உள்ள நிலையில், எனது தூண்டுதலின் காரணமாக பணி மாறுதல் செய்யப்பட்டுள்ளனர் என்பது தவறான தகவலாகும்.

(7) திரு. கிரண்குராலா, இ.ஆ.ப., பேரூராட்சிகளின் ஆணையர் அலுவலக கடிதத்தின்படி திரு. கே. இளங்கோ, இணை ஆணையர் (பொது) அவர்களின் தலைமையில் விசாரணை நடைபெற்றது. 25.05.2025 அன்று நடைபெற்ற விசாரணையில் 1. திரு. கலியவரதராஜ் 13வது வார்டு உறுப்பினர், 2. திரு. நடராஜ், 3வது வார்டு உறுப்பினர், 3. திரு. திருச்செல்வன், 17வது வார்டு உறுப்பினர், 4. திரு. வரதராஜன், 5வது வார்டு உறுப்பினர் ஆகியவர்கள் மாமன்ற கூட்டத்தில் தண்ணீர் பாட்டில் எடுத்து வீசியதும், தகாத வார்த்தைகள் திட்டியதும், தீர்மானங்கள் வாசிக்க விடாமல் இடையூறு செய்து அமளியில் ஈடுபட்டார்கள் என்பதை உண்மை என விசாரணையில் தெரிவித்துள்ளார்.

(8) பேரூராட்சி மன்ற உறுப்பினர்களுக்கு பேரூராட்சிகள் ஆணையகத்தால் விளக்கம் கோரி கடிதம் வழங்கிய பின்னரும் மீண்டும் மீண்டும் மன்ற கூட்டத்தில் தீர்மானங்களை நிறைவேற்ற முட்டுக்கட்டை போட முற்படும் திரு. கலியவரதராஜ், 13வது வார்டு உறுப்பினர், நடராஜ் 3வது வார்டு உறுப்பினர், திரு. திருச்செல்வன் 17வது வார்டு உறுப்பினர், வரதராஜன் 5வது வார்டு உறுப்பினர் ஆகிய நால்வர்களையும் இடைநீக்கம் செய்ய தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சி விதிகளின்படி இடைநீக்கம் செய்யப்பட்டது.

(9) பேரூராட்சி மன்ற தலைவர் அறையில் தலைவர் அமர்ந்துள்ள போது 1.காவியா, 12வது வார்டு உறுப்பினர் அவர்களின் கணவர் திரு. சேகர், 2. ரேவதி, 15வது வார்டு உறுப்பினர் அவர்களின் கணவர் திரு. டெல்லி என்ற ராஜகோபால் இவர்கள் பெண் தலைவர் என்றும் பாராமல் தகாத வார்த்தைகள் பேசி தாக்க முயற்சித்தார்கள்.

(10) பேரூராட்சி மன்ற செயல் அலுவலர் திரு. தி. சோமசுந்தரம் என்பவரை 1. நடராஜ், 2. கலியவரதராஜ், 3. ரஞ்சித்குமார், 4. சேகர், 5. ரமேஷ், 6. ஹசேன், 7. ராஜகோபால், 8. ஆண்சான்பீட்டி, 9.வரதராஜன் ஆகியோர்கள் மேற்கண்ட செயல் அலுவலரை தாக்க முற்பட்டு அநாகரிகமாக வார்த்தைகளை பேசியதால் செயல் அலுவலரால் காவல் நிலையத்தில் 25.10.2025 அன்று புகார் அளிக்கப்பட்டது.

எனவே எங்களது மீதுள்ள காழ்ப்புணர்ச்சியின் காரணமாக வேண்டுமென்றே எங்கள் மீது புகார்களை தெரிவித்துள்ளனர் என்பதை இம்முறைமன்ற நடுவத்தில் பணிவுடன் தெரிவித்துக்கொள்கிறோம்” என்று தெரிவித்துள்ளனர்.

9. மனுதாரர்களின் மனுக்கள் மற்றும் எதிர்மனுதாரரான தம்மம்பட்டி சிறப்புநிலை பேரூராட்சி செயல் அலுவலரின் அறிக்கைகள், பேரூராட்சி செயல் அலுவலரின் வாக்குமூலம் மற்றும் இரண்டாம் எதிர்மனுதாரரான பேரூராட்சி மன்ற தலைவர் ரா. கவிதா மற்றும் அவரது கணவரான திரு. ராஜா ஆகியோரின் வாக்குமூலம் ஆகியவை தொடர்புடைய ஆவணங்களுடன் கவனமாக பரிசீலிக்கப்பட்டது.

சேலம் மாவட்டம், தம்மம்பட்டி சிறப்புநிலை பேரூராட்சி மன்றத் துணைத் தலைவரும் 18-வது வார்டு உறுப்பினருமான (1) R. சந்தியா என்பவர் மற்றும் மன்ற உறுப்பினர்களான (2) G. ரமேஷ் (1வது வார்டு) (3) A. நடராஜ் (3வது வார்டு) (4) R. வரதராஜன் (5வது வார்டு) (5) K. சமீனா (8வது வார்டு) (6). A. சந்திரா (9வது வார்டு) (7) பெ. செல்வி (10வது வார்டு) (8) S. புவனேஸ்வரி (11வது வார்டு) (9) S. காவியா (12வது வார்டு) (10) B. கலிய வரதராஜ் (13வது வார்டு) (11) S. நித்யா (14வது வார்டு) (12) R. ரேவதி (15வது வார்டு) (13) S. திருச்செல்வன் (17வது வார்டு) ஆகியோர் தங்களது 10.10.2025 நாளிட்ட ஒரே மாதிரியான புகார்கள் கொண்ட முறையீட்டு மனுக்களில் தம்மம்பட்டி சிறப்புநிலை பேரூராட்சி மன்ற தலைவரும் மற்றும் 2வது வார்டு உறுப்பினருமான திரு. ரா. கவிதா என்பவர் முறையாக மன்றக் கூட்டங்கள் கூட்டுவதில்லை எனவும், இவரது கணவரும் மற்றும் 4வது வார்டு உறுப்பினருமான திரு. ராஜா என்பவர் மன்ற உறுப்பினர்களை மிரட்டுவதும் மற்றும் பெண் உறுப்பினர்களை தரக்குறைவாக நடத்துவதும், பேரூராட்சி திட்டப் பணிகளுக்கான ஒப்பந்தப்புள்ளிகளை இவரது கணவரே பினாமி பெயரில் மேற்கொண்டு தரமற்ற பணிகள் செய்து வருவதும், திட்டப் பணிகள் அனைத்தும் மன்றத் தலைவர் தனது மற்றும் தனது கணவரின் வார்டுகளுக்கும் மற்றும் தனது ஆதரவாளர்களான இரண்டு வார்டுகளுக்கு மட்டும் ஒதுக்கப்படுகின்றன எனவும், தூய்மைப் பணியாளர்களின் பணியினை

நிரந்தரம் செய்வதாக பணியாளர்களிடம் பணம் பெற்றுக் கொண்டு மன்றத் தலைவர் கையாடல் செய்துள்ளதாகவும், மன்றத் தலைவரின் அதிகார துஷ்பிரயோகம் காரணமாக 9 செயல் அலுவலர்கள் பணி மாறுதல் வாங்கி சென்றுள்ளனர் எனவும், மேலும் மன்றத் தலைவர் திருமதி. ரா. கவிதா மீது நம்பிக்கையில்லா தீர்மானம் கொண்டு வந்தாலும் அதில் எவ்வித நடவடிக்கையும் மேற்கொள்ளப்படவில்லை என தம்மம்பட்டி சிறப்புநிலை பேரூராட்சி மன்ற தலைவர் மீது புகார் அளிக்கப்பட்டுள்ளதை மனுதாரர்களின் முறையீட்டு மனுக்கள் மூலம் அறிய வருகிறது.

மனுதாரர்கள் புகாராக தெரிவிக்கப்பட்ட மனுக்கள் குறித்து இம்முறைமன்ற நடுவத்தால் 10.02.2026 அன்று நேரடி விசாரணை மேற்கொள்ள மனுதாரர்கள் மற்றும் எதிர்மனுதாரர்களுக்கு உரிய அழைப்பாணைகள் அனுப்பப்பட்டும், மனுதாரர்களாகிய தம்மம்பட்டி சிறப்புநிலை பேரூராட்சி மன்ற 13 உறுப்பினர்களும் 10.02.2026 அன்று நடைபெற்ற விசாரணையில் ஆஜராகவில்லை.

புகாருக்குள்ளான பேரூராட்சி மன்ற தலைவர் திருமதி. ரா. கவிதா மற்றும் அவரது கணவரும் 4வது வார்டு உறுப்பினருமான திரு. ராஜா ஆகியோர் 10.02.2026 அன்று நடைபெற்ற விசாரணையில் ஆஜராகி தங்களது வாக்குமூலத்தை அளித்துள்ளனர்.

தம்மம்பட்டி பேரூராட்சியில் 13.08.2025, 06.11.2025, 13.11.2025 மற்றும் 05.12.2025 ஆகிய தேதிகளில் பேரூராட்சி மன்றத் தலைவரால் மன்றக் கூட்டங்கள் நடத்திட அஜெண்டாவை அனைத்து மன்ற உறுப்பினர்களுக்கு அனுப்பப்பட்டும், மன்றத் தலைவர் உட்பட 5 மன்ற உறுப்பினர்கள் மட்டுமே கலந்துகொண்ட நிலையில் போதிய கோரம் இல்லாததால் மன்றக் கூட்டங்கள் நடத்த முடியாமல் ஒத்தி வைக்கப்பட்டது என்பதையும், இருப்பினும் பேரூராட்சி செயல் அலுவலரின் அதிகாரத்துக்குட்பட்ட பணிகள் அனைத்தும் நல்ல முறையில் செயல்படுத்தப்பட்டு வருகிறது என்பதையும் செயல் அலுவலரின் வாக்குமூலம் வாயிலாக அறிய வருகிறது.

மேலும் பேரூராட்சியின் பணிகளுக்கான ஒப்பந்தப்புள்ளிகள், இணையதளம் மூலம் அறிவிப்பு செய்யப்பட்டு, குறைந்த ஒப்பந்தப்புள்ளி வழங்கும் ஒப்பந்ததாரருக்கு விதிமுறைகளின்படி பணி ஆணை வழங்கப்பட்டு வருவதால், மன்றத் தலைவரின் கணவர் பினாமி பெயரில் ஒப்பந்தப்புள்ளி எடுக்கப்படுவது என்பது உண்மைக்கு புறம்பானது என்பதையும் செயல் அலுவலரின் வாக்குமூலம் வாயிலாக தெரிய வருகிறது. இது தவிர பேரூராட்சி திட்டப் பணிகள் எவ்வித பாரபட்சமின்றி அனைத்து வார்டுகளுக்கும் பணிகள் ஒதுக்கப்படுகிறது என்பதையும் பேரூராட்சி செயல் அலுவலரை பணியிட மாற்றம் செய்ய பேரூராட்சிகளின் இயக்குநருக்கு மட்டுமே முழு அதிகாரம் உள்ள நிலையில் பேரூராட்சி மன்றத் தலைவரின் தூண்டுதலின் பேரில் பேரூராட்சி செயல் அலுவலர்களை பணியிட மாற்றம் செய்யப்பட்டுள்ளது என்பது தவறான தகவல் என தெரிவித்திருப்பதையும் செயல் அலுவலரின் வாக்குமூலம் வாயிலாக அறிய வருகிறது.

மனுதாரர்கள் புகாராக தெரிவிக்கும் குற்றச்சாட்டுகளுக்கு எதிர்மனுதாரரான பேரூராட்சி செயல் அலுவலர் சமர்ப்பித்த 02.01.2026 நாளிட்ட அறிக்கையில் மன்றத் தலைவரின் கணவரான திரு. ராஜா என்பவர் மன்ற உறுப்பினர்களை மிரட்டும் தொனியிலும் பெண் உறுப்பினர்களை தரக்குறைவாக பேசியதில்லை என தெரிவித்திருப்பதை அவரது அறிக்கையின் வாயிலாக தெரிய வருகிறது. இதே புகாருக்கு தற்போதைய பேரூராட்சி செயல் அலுவலர் அக்காலக்கட்டத்தில் தான் பேரூராட்சியில் பணியில் இல்லாததால் திரு. ராஜா என்பவர் மன்ற உறுப்பினர்களிடம் மிரட்டுவது மற்றும் பெண் உறுப்பினர்களிடம் தரக்குறைவாக பேசியது குறித்து விபரம் தெரியவில்லை என தெரிவித்துள்ளதை அவரின் அறிக்கை மற்றும் வாக்குமூலம் வாயிலாக தெரிய வருகிறது.

தூய்மை பணியாளர்களின் பணியினை நிரந்தரம் செய்திட பணியாளர்களிடம் பணம் வசூலிக்கப்பட்டு கையாடல் செய்யப்பட்டதாக தெரிவித்த புகாருக்கு பேரூராட்சி செயல் அலுவலர் சமர்ப்பித்த 02.01.2026 நாளிட்ட அறிக்கையில் மேற்காணும் புகாராக தெரிவிக்கும் நிகழ்வுகள் நடைபெறவில்லை என தெரிவித்துள்ள நிலையில் தற்போதைய பேரூராட்சி செயல் அலுவலரின்

09.02.2026 நாளிட்ட அறிக்கையில், பணியாளர்களிடம் மன்றத்தலைவர் பணம் பெற்றுள்ளதாக தெரிவித்தது தன்னால் உறுதி செய்யப்படாத தகவல் என தெரிவித்திருப்பதையும் அறிய வருகிறது.

மேற்காணும் நிலையில் மனுதாரர்களின் புகாரான பேரூராட்சி மன்ற தலைவரின் கணவரான திரு. ராஜா என்பவர் சக மன்ற உறுப்பினர்களிடம் மிரட்டும் தொனியில் பேசுவதும், பெண் உறுப்பினர்களிடம் தகாத வார்த்தைகளை பேசுவதும் மற்றும் மன்ற தலைவர் தூய்மைப் பணியாளர்களின் பணியினை நிரந்தரம் செய்திட பணியாளர்களிடம் பணம் பெற்று கையாடல் செய்வதும் என தெரிவித்துள்ள புகார் குறித்து பேரூராட்சிகளின் இணை இயக்குநர் தலைமையில் ஒரு குழுவை அமைத்து அக்குழு மூலம் தம்மம்பட்டி சிறப்புநிலை பேரூராட்சியில் விசாரணை மேற்கொண்டு அக்குழு அளிக்கும் அறிக்கையின் அடிப்படையில் உரிய நடவடிக்கை மேற்கொள்ள பேரூராட்சிகளின் இயக்குநருக்கு பரிந்துரை செய்யலாம் என இம்முறைமன்றம் நடுவம் முடிவு செய்து அவ்வாறே ஆணையிடுகிறது.

2026-ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 27-ஆம் நாள் என்னால் கையொப்பமிட்டு அலுவலக முத்திரையுடன் இவ்வாணையிடப்படுகிறது.

//ஒப்பம்//

தமிழ்நாடு உள்ளாட்சிஅமைப்புகள் முறைமன்ற நடுவர்

பெறுநர்

1) திருமதி. ர. சந்தியா,
க/பெ. ரஞ்சித்குமார், துணைத்தலைவர்,
தம்மம்பட்டி சிறப்புநிலை பேரூராட்சி, தம்மம்பட்டி,
பனந்தோப்பு தெற்கு காட்டுகொட்டாய், கோனேரிப்பட்டி,
தம்மம்பட்டி அஞ்சல் – 636 113
சேலம் மாவட்டம்.

2) க. ரமேஷ்,
த/பெ. கணேசன்,
1வது வார்டு உறுப்பினர், தம்மம்பட்டி சிறப்புநிலை பேரூராட்சி,
1/45, உடையார்பாளையம்,
தம்மம்பட்டி - 636 113.
சேலம் மாவட்டம்.

3) திரு. அ. நடராஜ்,
த/பெ. அய்யாவு,
3வது வார்டு உறுப்பினர், தம்மம்பட்டி சிறப்புநிலை பேரூராட்சி,
18 A, ஜோதிநகர், உடையாளர்பாளையம்,
தம்மம்பட்டி அஞ்சல் - 636 113,
சேலம் மாவட்டம்.

4) திரு. R. வரதராஜன்,
த/பெ. ரங்கசாமி,
5வது வார்டு உறுப்பினர், தம்மம்பட்டி சிறப்புநிலை பேரூராட்சி,
161.பி. வடக்கு காட்டுகொட்டாய்,
தம்மம்பட்டி அஞ்சல் - 636 113.
சேலம் மாவட்டம்.

5) திருமதி. க. சமீனா,
W/o காதர்மொய்தீன்,
8வது வார்டு உறுப்பினர், தம்மம்பட்டி சிறப்புநிலை பேரூராட்சி,
26, முஸ்லீம் தெரு, தம்மம்பட்டி அஞ்சல்,
சேலம் மாவட்டம் - 636 113.

6) ஆ. சந்திரா,
W/o ஆன்சன்பீட்டி,
9வது வார்டு உறுப்பினர்,
கிருத்துவதெரு, கோனேரிப்பட்டி,
தம்மம்பட்டி சிறப்புநிலை பேரூராட்சி, தம்மம்பட்டி அஞ்சல்
சேலம் மாவட்டம் – 636 113

7) திருமதி. பெ. செல்வி,
க/பெ. பெருமாள்,
10வது வார்டு உறுப்பினர்,
தம்மம்பட்டி சிறப்புநிலை பேரூராட்சி,
161, கடைவீதி, தம்மம்பட்டி அஞ்சல் – 636 113.
சேலம் மாமவட்டம்.

8) திருமதி. S. புவனேஷ்வரி,
க/பெ. ஸ்ரீகுமரன்,
11வது வார்டு உறுப்பினர்,
100, நடுவீதி, தம்மம்பட்டி அஞ்சல் – 636 113
தம்மம்பட்டி சிறப்புநிலை பேரூராட்சி, தம்மம்பட்டி,
சேலம் மாவட்டம். – 636 113.

9) திருமதி. சே. காவியா,
W/o சேகர்,
12வது வார்டு உறுப்பினர்,
7/3, ஆதிதிராவிடர் தெரு,
தம்மம்பட்டி சிறப்புநிலை பேரூராட்சி,
தம்மம்பட்டி அஞ்சல் – 636 113,
சேலம் மாவட்டம்.

10) திரு. B. கலியவரதராஜ்,
S/o போஜன்,
13வது வார்டு உறுப்பினர், தம்மம்பட்டி சிறப்புநிலை பேரூராட்சி,
8, அருந்ததியர் தெரு, தம்மம்பட்டி அஞ்சல்,
சேலம் மாவட்டம் - 636 113.

11) திருமதி. செ. நித்யா,
W/o செந்தில்குமார்,
14வது வார்டு உறுப்பினர், தம்மம்பட்டி சிறப்புநிலை பேரூராட்சி, தம்மம்பட்டி,
234, தெற்குகாட்டு கொட்டாய், கோ.பட்டி,
தம்மம்பட்டி அஞ்சல் – 636 113, சேலம் மாவட்டம்.

12) திருமதி. ரா. ரேவதி,
W/o ராஜகோபால், 15வது வார்டு உறுப்பினர்,
தம்மம்பட்டி சிறப்புநிலை பேரூராட்சி, தம்மம்பட்டி – 636 113,
15-C, ஆதிதிராவிடர் தெரு, தம்மம்பட்டி அஞ்சல்,
சேலம் மாவட்டம்.

13) திரு. S. திருச்செல்வன்,
S/o சண்முகம்,
17வது வார்டு உறுப்பினர், தம்மம்பட்டி சிறப்புநிலை பேரூராட்சி, தம்மம்பட்டி,
101, ஆஸ்பத்திரி தெரு, தம்மம்பட்டி அஞ்சல்,
சேலம் மாவட்டம் - 636 113.

14) திருமதி. ரா. கவிதா,
தலைவர், தம்மம்பட்டி சிறப்புநிலை பேரூராட்சி,
தம்மம்பட்டி, சேலம் மாவட்டம்.

15) செயல் அலுவலர்,
தம்மம்பட்டி சிறப்புநிலை பேரூராட்சி, சேலம் மாவட்டம்.

16) பேரூராட்சிகளின் இயக்குநர்,
பேரூராட்சிகளின் இயக்குநரகம், ராஜா அண்ணாமலைபுரம்,
எம். ஆர்.சி நகர், சென்னை–600 028.

17) இணை இயக்குநர் / ஒருங்கிணைப்பு அலுவலர் (Nodal Officer), (பெயரிட்ட உறையில்)
பேரூராட்சிகளின் இயக்குநரகம்,
ராஜா அண்ணாமலைபுரம், எம். ஆர்.சி நகர், சென்னை–600 028.

<u>நகல்</u>
மாண்புமிகு முறைமன்ற நடுவரின் தனிச் செயலர்.
இகோ/உதிரிகள்.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

செயலாளர்